
ஈழமணித் திருநாட்டின் சுதந்திர தினவிழா

# மரதன் பாக்கள் 1949





அரச பொற்கிழிப் புலவர் / கவிமாமணி

**க.த. ஞானப்பிரகாசம்**

நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமணித் திருநாட்டின் சுதந்திர தினவிழா

# மரதன் பாக்கள்

# 1949

அரச பொற்கிழிப் புலவர் / கவிமாமணி
க.த. ஞானப்பிரகாசம்
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **Title of the Book** | : | **MARATHON PAKKAL - 1949** |
| **Author** | : | KAVI MANI K. T. GNANAPRAGASAM |
| **Address** | : | `RANI MAṆAI ', ALVAI, SRI LANKA. |
| **Edition** | : | 2016 |
| **Copy right** | : | The Author |
| **Size** | : | A5 |
| **Pages** | : | viii + 36 = 44 |
| **Publisher** | : | Harikanan (Pvt) Ltd.,<br>No. 681, K.K.S. Road, Jaffna. |


**Internationl Standard Book Number**
**978 - 955 - 43475 -5 -7**

| | | |
|---|---|---|
| **நூல்** | : | **மரதன் பாக்கள் - 1949** |
| **ஆசிரியர்** | : | *கவிமணி க. த. ஞானப்பிரகாசம்* |
| **முகவரி** | : | *'இராணி மனை', அல்வாய், இலங்கை.* |
| **பதிப்பு** | : | *2016* |
| **பதிப்புரிமை** | : | *ஆசிரியருக்கு* |
| **அளவு** | : | A5 |
| **பக்கம்** | : | viii + 36 = 44 |
| **வெளியீடு** | : | *பிள்ளைகள்* |
| **அச்சுப்பதிப்பு** | : | *கரிகணன் (தனியார்) நிறுவனம்*<br>*இல. 681, கே.கே.எஸ். வீதி,*<br>*யாழ்ப்பாணம்.* |

**சர்வதேச நியம நூல் இலக்கம்**
**978 - 955 - 43475 -5 -7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரச பொற்கிழிப் புலவர் / கவிமாமணி
**க.த. ஞானப்பிரகாசம்**
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந் நூல் காணிக்கை

## விருத்தம்

உடலுக்காய் உழைக்குபல மனிதர் வாழும்
உலகத்தே உளத்துக்கும் ஆன்மா வுக்கும்
வடிதேற லமுதனைய ஞானப் பாலால்
வாழ்வளித்த மாதவராம் விபுலா னந்த
அடிகள்பெரும் புலவமணி பெரிய தம்பி
அருட்கடலாஞ் சோதரர்இன் னாசி முத்தாம்
முடிவேந்தர் வளர்த்த தமிழ் முடித்த சான்றோர்
மூவருக்கும் இந்நூலை யர்ப்ப ணித்தேன்.

மரதன் புலவர்
**கவிமணி ஞானி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டாளர் உரை

எமது அன்புக்குரிய தந்தையாரின் "மரதன் பாக்கள்" என்ற இக்கவிதைப் பகுதி இதுவரை அச்சுவாகனம் ஏறாமல் இருந்த பெருங் குறையை, அவரது பிள்ளைகளாகிய நாம் இன்று நிவர்த்தி செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். எமது தந்தையார் பாராட்டுக்களையும், வெகுமதிகளையும் விளையாட்டாகக் கருதிய மாமேதை. கவிதை புனைவது மட்டுமே அவரது வேட்கையாக இருந்தது. எனினும் அவரது கவிதைகள் கும்பகர்ணனின் துயில் போல் ஆகிவிடக்கூடாது என்று காலம் தாழ்த்தியாவது பிள்ளைகளாகிய எமக்கு உணர்த்தியதோடு, அவற்றை வெளியிடத் தூண்டிய எல்லாம் வல்ல இறைவன் ஒருவனுக்கே எமது நன்றிகள்.

13.08.2016

பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

ஈழமணித் திருநாடு சுதந்திரம் பெற்ற ஓராண்டு நிறைவை அரசு 04.02.1949 இல் பெரும் விழாவாகக் கொண்டாடியது. அந்நாள் நிகழ்ச்சிகளில் மரதன் அஞ்சல் ஓட்டம் முக்கிய இடம் பெற்றது. அரசு, இதனையொட்டி ஓர் கவிதைப் போட்டியை ஏற்படுத்தி ஒவ்வொரு இனத்திலும் இரு புலவர்களைத் தேர்ந்தெடுத்து, முன்னாள் பிரதமர் உயர்திரு. டி.எஸ்.சேனநாயக அவர்கள், தமது காரியாலயத்தில் பொற்கிழி வழங்கி கௌரவித்தார். முதற் பரிசு முதுதமிழ்ப் புலவர் திரு. மு. நல்லதம்பி அவர்கட்கும், இரண்டாவது பரிசு எனக்கும் கிடைத்தது.

அஞ்சல் வீரர்கள் ஓடிய பாதையிலும், அதனைச் சூழவுள்ள இடங்களிலும் அமைந்த சரித்திர வரலாறுகள் கவிதைகளில் ஞாபகப்படுத்தப்படவேண்டும் என்பது போட்டி நிபந்தனைகளில் முக்கியமான ஒன்றாகும். இப் போட்டியில் என்னைப் பங்கு பற்றுமாறு தூண்டுதல் அளித்து, மரதன் வீரர்கள் ஓடிய பாதைகளின் படத்தை முறையாக வரைந்து வேண்டிய வரலாற்றுக் குறிப்புக்களையும் எழுதியனுப்பி உதவியவர் யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திரு. நீ.ப. ஜெகநாதன் என்பவர் ஆவார். இவர் பின்னாளில் மன்னார், மட்டக்களப்பு, யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பேரறிஞர். என் இதய பூர்வமான நன்றி என்றும் அவருக்குண்டு.

இச்சிறுநூலை அச்சிட வேண்டும் என்று ஆண்டாண்டாக என்னைத் தூண்டி வந்தவர்கள் "நாட்டுக்கோர் தலைவர்" என்ற நன்மதிப்பைப் பெற்ற நெடுநகர் நாகேந்திரர் ஐயாவும், அவரது தவப்புதல்வனும், சமூக வேவையாளனுமான நா. கணபதிப்பிள்ளையும் என்பதை நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

நன்றி.

**க. த. ஞானப்பிரகாசம்**
"ஞானவாசம்",
நெடுந்தீவு கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மரதன் ஓட்டம்" பற்றிய ஒரு விளக்கம்

ஓட்டந் தாண்டல் போட்டிகளில் சிகரம் போன்றது மரதன் ஓட்டம். இந்த நீண்ட தூர ஓட்டப்பந்தயத்துக்கு "மரதன் ஓட்டம்" என்று பெயர் வந்தது எப்படியெனத் தெரியுமா?

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் கிரேக்கப் படைகளுக்கும் பாரசீகப் படைகளுக்கும் "மரதன்" என்ற இடத்தில் பயங்கரமான சண்டை நடந்தது. போரின் முடிவில் கிரேக்கப்படைகள் வென்றன. வெற்றிச் செய்தியை ஏதென்ஸ் நகர மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்துடன் தன் காலை மட்டுமே நம்பி ஓட ஆரம்பித்தான் ஒரு ஏதென்ஸ் வீரன். போர் நடந்த இடத்திற்கும் ஏதென்ஸ் நகரின் சந்தை கூடும் மையமான இடத்துக்கும் இடையிலான தூரம் 26 மைல் 385 ஜெங்கள். இத்தூரத்தை இடையில் எங்குமே நிற்காது ஓடிக்கடந்த "பீடிபைடிஸ்" என்ற அந்த வீரன் மிகவும் களைத்துவிட்டான். நாக் குளறியது. பேச முடியவில்லை. சந்தைப்பகுதியிலிருந்தவர்களிடம் சைகை மூலமாக கிரேக்க வெற்றியைத் தெரிவித்தான். அடுத்த கணம் அவனது ஆவி பிரிந்தது.

இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையிலேயே மரதன் ஓட்டப் பந்தயம் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் நடத்தப்படுகிறது.

பீடிபைடிஸ் ஓடிய 26 மைல் 385 கெஜமே இந்தப் பந்தயத்தின் தூரம். போட்டி நடைபெறும் இடத்தின் சூழ்நிலையைப் பொறுத்து இத்தூரம்சற்றுக் கூடக்குறைய அமைவதுண்டு.

**ஆதாரம் - "சிந்தாமணி" பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

## காப்பு வெண்பா

தெய்வப் பதியிலங்கைத் தேவி சுதந்திரத்தால்
எய்தும் பயனுகர எம்மரசு: - செய்விழாவில்
வைத்த "மரதனஞ்சல்" மாசரிதை பாடவருட்
கத்தன் கமலபதங் காப்பு.

அவையடக்கம்:

## விருத்தம்

வானமுகி லேழுமழை பொழிந்ததென நாற்கவியும் வரைந்துதள்ளி
ஞானமுறு கவியரசர் புவிபுரக்கு நல்லீழ நாட்டின் கண்ணே
மானமிலா தடியேனும் மரதனஞ்ச லோட்டமதின் மாண் புரைத்தல்
தேனமிர்த முண்பார்க்குப் புளிங்காடி தனைக்கொடுத்த செய்
கைத் தாமே

## ஈழமணித் திருநாட்டின் சுதந்திர விழா

## மரதன் பாக்கள்

சுதந்திரம் வாழ்வி னுக்கோர் சுடரொளி துலங்க வைக்கும்
சுதந்திரம் நம்பிக் கைக்கோர் சுகிர்தமாம் மகிழ்வை யூட்டும்
சுதந்திர முண்மைக் குற்ற துணைவனா யுதவி நிற்கும்
சுதந்திர மன்பினுக்கோர் தொல்புகழ் சுரந்து காக்கும். 1

சாகரஞ் சூழ்பு விக்குத் தபனனா தாரம்; தொங்கு
மீகடி காரத் துக்கு விசை விலா தாரம்; எங்கள்
தேகத்துக் குயிரா தாரம்; தீபத்துக் கெண்ணெ யாகும்;
சோகமே யில்லாத் தூய சுதந்திர மெமக்கா தாரம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணினு மினிய தென்றார்; கடவுளின் கடாட்ச மென்றார்;
மண்ணின்முன் னின்ப மென்றார்; மானிட ரியற்கை யென்றார்
உண்ணுநீர் பவனமெங்க ளுயிருனு முயர்ந்த தென்றார்;
புண்ணியச் சுதந்திரத்தின் பொற் பினை யுணர்ந்த சான்றோர். 3

கங்கைபாய் வங்கந் தானுங் கடும்பசி யடையக் கண்டேம்
சங்கைசேர் காந்தித் தாத்தா சாம்பருங் கரையக் கண்டேம்
துங்கநெற் கழனி சூழ்ந்த தோமிலாப் பர்மா தேசந்
தங்கிய யமைச்சர் தாமுஞ் சட்டென மடியக் கண்டேம் 4

இத்தகை யின்ன லின்றி யாதொரு வணுக்குண் டின்றி
உத்தம லங்கா மக்க ளொருதுளி யுதிரந் தானும்
இத்தரை சிந்த லின்றி யெம்மருந் தலைவர் கூடித்
துய்த்திடத் தந்த ஈழச் சுதந்திர மாட்சி யென்னே 5

இன்னநற் சுதந்தி ரத்தை யெமக்கென இறைவ னீந்த
அன்னையாம் ஈழநாடே யாண்டுகள் நா பத்தின் மேல்
துன்னுபத் தொன்பா னூறு தொடுத்தவா றெட்டின் போது
பொன்னிகர் மாசி நான்கிற் பொலிவுறப் பூண்ட தம்மா 6

## சுதந்திரம் பெற்ற வந்நாள்
### மக்கள் கொண்ட மகிழ்ச்சி

தொட்ட வச்ச மடிமை மிடிமை விட்டு வான சோதியே
சுற்று கற்றை யிருளையெற்றிச் சுதந்தி ரத்தின் தூய்மையைப்
பட்ட பாட்டின் பயனை யின்று பாரு மென்ற பான்மைபோற்
பக்கநின் றெறிக்க வீழ மக்க டுக்கம் நீக்கியே
கெட்ட காலந் தீர்ந்து நாடுங் கீர்த்தி வந்து சேர்ந்ததே
கீழ்மை யாவும் போக்கி யாண்மை கேண்மையோடு வாழுவோம்
பட்ட தாருந் தளிர்க்கு மென்று பன்னிப் பன்னிப் பகர்வதென்?
பற்றி வெற்றி முரசறைந்து பாடு மாடுமென்றனர் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

சங்குகள் முழங்கினபல் சல்லரியு மார்த்த:
மங்குறவ ழாலய மணிகளு மொலித்த
எங்கடவ ஈழமணி யின்பமுற வென்றே
செங்கைகுவித் தாசிமொழி செப்பினர்க ணின்றே. 8

அந்தரநற் துந்துபிக ளைந்துமொலி செய்த
வந்தமரர் சுந்தமலர் மாரிதனைப் பெய்தார்:
தந்தைசென நாயக்கன் சிந்தையென மக்கள்
அந்தமிலா னந்தகட லாடினர்பா டினரே. 9

## சுதந்திர மரதன் தூதைச் சொல்வா மெனல்

வேறு

சுதந்திரத் தேவி யீன்ற சுகுணநற் பால னோராண்
டிதம் பெற வளர்ந்து வானி ளிளம்பிறை யென்ன நின்ற
நிதந்தரு மகிழ்ச்சி நாளில் நிகரிலா மாண்பு பூண்ட
பதந்தரு மரதன் தூதின் பான்மையைப் பகர்வாம் மன்னோ! 10

## மரதன் தூதின் மாண்பு

வேறு

சுந்தரர்க்காய்ப் பரமசிவன் தொடர்ந்த தூதுந்
தொல்லாண்மைப் பாண்டவர்க்காய்த் துளவோன் தூதும்
இந்திரற்கா யேந்தனளன் ஏகு தூதும்
ஈரைந்தாய் விதந்துரைத்த வெல்லாத் தூதும்
இந்தாழி சூழிலங்கா தேவிக் காக
ஈன்றெடுத்த மக்களெலாம் இணைந்து கூடித்
தந்தவிந்த மரதனுக்கு நிகர தாமோ?
தனக்குவமை தானெனவே சாற்ற லாமே. 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத் தீபகற்பச் சிறப்பு

### வே று

சித்தமொடு நன்னாகர் சிங்களவர் செந்தமிழர்
தேருமே நாட்டர் முறையே
செங்கோல் செலுத்தினது மெங்குமே மங்காத
தெண்டிரைசூழ் 'துவரை', யென்ன
வைத்தொளிரு 'ஹம்மன்கீல்' ஆதியாங்கோட்டைகளும்
மாசகற்று கீரி மலையும்
மங்குல்தோய் தெங்குதா லம்பலவு கதலிமா
வாளைபாய் கமுகி னினமும்
சுத்தமுறு முத்தமிழ்ப் புத்தமுதை வாரியளி
தொல்லைநகர் நல்லை மேவு
தோலாத நாவலன் சொற்கலைஞன் ஆதியாஞ்
சோதிகளின் சீரு மேவிக்
கத்துகடல் வண்ணனொண் 'கௌஸ்துவம்' போலொளிரு
கவினீழத் தேவி முடிசேர்
கனகமணி வல்லபம் எனவறிஞர் தினமுமுறை
கலைகொள் யாழ்ப் பாண நாடே! 12

### வே று

பெற்றதாய் மடியிருந்து சிறு மதலை
முலையருந்தப் பெருகுமன் பால்
உற்றதாய் நோக்குமொரு நோக் கெனவே
பாரதத்தா யுனையே நோக்கு
நற்றவஞ்சேர் யாழ்ப்பாண நன் னாடே
யெனைப்பெற்ற நல்லா ணீயே!
கற்றவர்க்கோர் தனிவிருந் தே! கலைமகளார்
மதிவதனக் கண்ணே யன்றோ! 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்றனரும் பேருரைக்கி லுள்ள மெலா
மானந்த உதக மூறிச்
சென்றிடுமே: நம்மரும் பொன் ராமநா தத்
துரையைச் செய்யவாசல்
கொன்றை மரம் பொன் சொரியும் புலவர்
சின்னத் தம்பி யொடு குமார சுவாமி
யென்ற பல வறிஞர்களை யீன்றெடுத்த
பெருமை தனையியம்பற் பாற்றோ 14

## பருத்தித்துறையில் முதல் முதலில் ஆரம்பமாகிய மரதன் தூ து

### வே று

இன்னணமே சீர்பெருகு யாழ்ப்பா ணத்திற்
கி லங்குமுடி யாம்பருத்தித் துறையின் கண்ணே
பொன்னான காவிரிப்பூம் பட்டினத்துப்
பொற்புடைய 'இந்திரநல்' விழவீ தென்று
சொன்னாலு மடங்காத பெருமை வாய்ந்த
தொல் புகழைப் படைத்தொளிரு மரதன் தூதைப்
பன்னாளும் மறவாதே நேரிற் கண்ட
பாக்கியத் தா லினி தெடுத்துப் பகர்வாம் மன்னோ! 15

### வே று

புண்ணியக் கற்ப தாருவை யொத்த
புகழ்தரு தாலம தோலை
மன்னிய முடியைப் புனைந்தொரு மாது
வலம்வந்து வைத்திடு தூதை
நண்ணிய மாசி யிரண்டதி காலை
நவிலொரு மணியுட னரைசேர்ந்
தெண்ணிய மூர்த்தம் வந்ததும் வாங்கி
யேகினன் சுந்தர லிங்கம் 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய வல்லி புரப்பதி சந்நிதி
பொங்குமா தீர்த்தமோ வென்ன
எண்ணியே யெழுந்தோர் சுதந்திர லங்கா
இறைவியே நீடுவாழ் கென்று
பண்ணெழுந் தார்க்கப் பகர் வல்லைப் பாலம்
பாவலர் நாவலர் சங்கிலி
மன்னவன் பதிசேர் யமுனாரி சுரங்கம்
மாமயில் வாகனன் கோயில் 17

அற்புத நல்லூர் அழகுங்கண் டோடி
அணி திகழ் புரிசைகோ புரநற்
பொற்புறு நகர மண்டலங் கவினார்
பூமுற்ற வீதி பொற் கோட்டை
பற்பலா வணநன் மறுகுகள் சூழ்ந்து
பங்கயச் செல்வனுந் தங்கச்
சிற்பிகள் சமைத்த அற்புத நகராம்
செந்தமிழ் யாழ்நகர் சேர்ந்தார். 18

## சூரியோதயம் : வேறு

ஈழமா தேவி வீரர் இன்னெழின் மரதன் கண்டு
தாழமா நிலத்தி லுள்ள சராசர மனைத்து மின்பில்
ஆழவே கதிர்பரப்பி யருணனங் கமைத்த தேரில்
ஏழுவாம் பரிகள் பூட்டி யெழுந்தன னிரவி யென்பான் 19

வான்கிளை யிருந்த புட்கள் வாவெனக் கூவிநிற்கத்
தேன்மது பிலிற்றி நின்று செய்யதா மரைகள் பூக்கக்
கான்பெறு மயில்க ளாடக் கருங்குயி லிசைகள் பாட
ஏன்பல விளம்பல்! ஆனை யிறகினைக் குறுகிச் சென்றார். 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி நாடும் வவுனியாவும் : வேறு

தெண்டிரையொண் முத்தொதுக்கும் மன்னார் முன்னாட்
தேவாரப் பாடல்பெறு திருக் கேதீச் வரமும்
பண்டிருந்த நாகர் குலத் தேவி வாழ்ந்த
பண்புநிறை மாந்தை மடுப் பதியுஞ் சூழ்ந்து
வண்டிருந்த பூங்கமல வாவி செந் நெல்
வளம் பெருக்கும் வன்னி நாட் டழகு தாங்கிக்
கொண்டிருந்து குலவுகின்ற வவுனியாவைக்
குறிப்பிட்ட நேரமதிற் குறுகி னாரே. 21

## அநுராதபுரி : வேறு

அந்நாளி லாரியநன் மன்னவனும் அநுரதனின்
நன்னாமந் தாங்கி நின்றே
ஆசித்த கொல்லாமை விரதத்தைப் பூசித்த
அசோகனது நட்பி னாலே
பொன்னான வட விந்ய புத்தமதம் இந்நாட்டிற்
பொலிகென்று தீசன் போற்றிப்
போதித்த போதனையும் பொன்றுகினும் பொன்றாத
புகழுடைய வாயிரங்கான்
மின்னான புரிசை சூழ்மண்டபமும் மாமேக
வெள்ளரசு மனுவேந் தனையும்
வென்றிட்ட நீதியொடு நின்றிட்ட எல்லாள
வேந்தனது மாண்புங் காட்டிப்
பன்னாளும் பாகியனே சொன்னாலும் பற்றாத
பழம்புகழிற் பழுத்தே யிந்நாட்
பாரித்த புதுநகராம் அநுரத புரிப்பெருமை
படம் பிடித்த வென்னப் பார்த்து 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டம்புலாச் சந்தி: வேறு

அலகில்புகழ் ஜனநாத நெஞ்சுத் தூதும்
அணிந்துவரு மின்னேரி யன்னத்தூதுங்
குலவிவரு கல்லோயாக் கிள்ளைத் தூதுங்
கோணேசர் மலையனுப்பு மேகத்தூதும்
இலகுகிரிச் சிகிரியாத் தென்றற் றூதும்
இவையைந்தும் பாண்டவர்கள் போல வந்தே
உலகு புகழ் டம்புலாச் சந்தி நின்றங்
கோடுபவர் கரங்கொடுத்தே யுரைக்கச் சொல்லும் 23

## டம்புலா

அற்புதமா மலைபெற்றுத் தென்னிந் தியாவின்
அருமைதவழ் சிற்பமுஞ்சீ ரசந்தா தானும்
ஒப்பாகா மலைக்குகையும் வால கம்பா
குருவமுறு சிலையுடனே யுலகம் போற்றுங்
கற்பனைக்கு மெட்டாத சிவால யங்கள்
கதைப்பன போற் காட்சிதரு மாட்சிபெற்றுப்
பொற்புடனே மேனாட்டார் தாமும் நாணப்
புதுமையுடனே பொலியுதம் புலாவைத் தாண்டி 24

## கண்டி

புத்தபிரான் தந்தமதைக் கலிங்க நாட்டுப்
புரவலனின் புத்திரி பூங் குழலினூடே
பத்திரமாய்க் கொண்டுவர அதனைப் பெற்றுப்
பாலித்த தலதாவும் குட்டுவன் றன்
பத்தினிமா வணக்கமதிற் பங்கெடுத்த
பார்வேந்தன் கஜபாவின் பண்பு காட்டும்
உத்தமியி னாலயமுங் கண்ணிருந்தே
ஓவியத்தி னுட்பமெல்லா முணர்த்தக் கண்டு 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைகளின் கடியுடனே கட்டை தானும்
அல்லல்தனை விளைக்கின்ற கண்டியென்றே
பட்டபல கட்டமெலாம் பாடிவந்தார்
பார்க்கவிந் நாளிந்திரனும் பாரியோடே
யிட்டமுறும் பூங்காவாம் பேராதனையும்
ஏந்தல் ஸ்ரீவிக்கிரமன் இழப்பும் பிலிமத்தலாத்
துட்டர்களின் சூழ்ச்சிகளும் நினைவிலூட்டுஞ்
சுந்தரமாங் கண்டிநகர்த் தொன்மை நோக்கி 26

## கேகாலை - பொல்காவெல - விக்ரோறியாப் பாலம்

பூங்காவும் பூகமுகும் பொலிந்து சூழும்
போற்றுமுயர் கேகாலை பொல்கா வெல்லை
பாங்காகக் கண்டு கண்டு நான்காந் தேதி
பகல் மூன்று மணயிளவில் விக்ரோ றியாவாம்
ஓங்குமுயர் பாலமதிற் சேர்ந்தா ரிந்த
ஒப்பரிய வடமரதனி தினி றுத்தி
நீங்காத பழம் பெருமை நிலவி யோங்கும்
நிகரில்லாக் குணதிசையின் மரதன் சொல்வாம். 27

## குணதிசை மரதன் - மட்டக்களப்பு

சுந்தரரும் புலவர்களும் வீற்றிருந்த தென்மதுரைத் தலமோ! தோன்றுஞ்
சந்திரனு மிலக்குமியும் சார்ந்ததிருப் பாற்கடலோ! சங்க மாய்ந்த
செந்தமிழின் துறைகண்ட சுவாமிவிபு லானந்தர் செனித்த நாடாம்
அந்தமிலா வளனிறைந்த மட்டுநகர் மாண்மையெவர் அளக்க வல்லார். 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழின் மணங்கலந்த தென்றலினைச் சுவாசிக்கத் தேன்பால்
தேக்கி
வந்தவுயர் கலையமுதின் விருந்துண்ண மனந்தூய மக்களோடு
சந்ததமு முறவாடப் புண்ணியஞ் சேர் தலங்கள் பல தரிசித் தாடக்
கந்தமலர் வாவிமீன் இசைகேட்க மட்டுநகர் கண்டாற் போதும். 29

## வேறு

பாலுந் தேனும் பொழிந்திடுங் கானான்
பண்டைச் செல்வம் பளிங்கெனக் காட்டும்:
சேலும் வாளையுந் தெங்கினிற் பாயும்:
செல்வ வீதியில் வால்வளை மேயும்
ஆலுஞ் சங்கின வோசைகள் வாவி
அண்ட கோளமும் விண்டிடும் மேவி
மேலுங் கோயிலுந் தீர்த்தமும் ஓங்கும்
வெண்ணெய் நல்லூர் போல்வளன் தேங்கும். 30

கிழக்கி லங்கையிற் சூரிய னொப்பாங்
கீர்த்தி மிகுந்திடு மட்டக் களப்பாம்
அளக்க லாற்றா அறிஞர்தங் கூட்டம்
ஆங்கு மேவி மரதன் மா ஓட்டம்
விளக்கிப் "போய்வரு வாய் கிளி" யென்ன
வீரன் றப்பியெல் மின்னெனத் துன்ன
முழக்கு மோதை செவியி லுதைக்கும்
முழையிற் சீயமும் நின்று பதைக்கும் 31

போற்றும் பருத்தித் துறை சேர்ந்த மரதன்
புறப்பட் டிருபான் மணிசென்ற நேரம்
காற்று வேகத் துடன் சென்ற காட்சி
காயம் நீங்கினும் நீங்கிடா மாட்சி:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்றிற் குளிக்கும் வரால் மேதி சீறும்:
சேல்கள் எழுந்து தேனுறை கீறும்:
ஆற்று மாவலிச் செல்வ மனைத்தும்
அளகை யென்ன அகத்தில் நினைத்தும். 32

மான பரணன்தென் னாட்டுடை மன்னன்
மைந்தன் பராக்கிரம வாகவன் பின்னர்
வான கங்கை பகீரதன் கொண்டு
வந்தது போலோர் உத்தியைத் தந்தான்
போன காலத்தில் நெல் விளை வித்துப்
புவியி லெங்கும் அவியெனத் துய்த்தார்:
ஈனம் வந்து விளைந்துள தென்றே
யிந்நா ளெழுந்தன திட்டங்கள் நன்றே. 33

வேட்டை விளங்கிடும் விந்தனை நண்ணும்
விஜயன் சந்ததி வேடரை யெண்ணும்
நாட்ட மானகைக் கோடரி கொண்டே
நல்ல தூதுக் கிரண்டுபேர் சென்றார்
சேட்டமாம்பதி வதுளை கடந்தே
செல்லஅப் புத்தளைச் சீர்த்தி தொடங்கும்
பாட்டை சாரிபோ லோடினர் லங்கைப்
பாராள மன்றத்தோ ரங்கத்த ரிங்கே. 34

பேரவர்க் கே 'இறம்புக் வத்ய' தாமே
பேணும்பொற் சூலம் பிடிக்கக் கண்டோமே
தேருமவ் விந்துத்தே வாலயம் நாடித்
திவ்விய வாசியைத் தேர்ந்து மன்றாடிக்
காரும் பொழிந்திடும் மாண்பினைக்காண்பர்
கல்லோயாத் திட்டமுங் கற்பனை பூண்பார்
ஓருங் குறிஞ்சி நில வளன் தோணும்
உம்பர்க்கும் நல்விருந் தாயங்கு காணும். 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட்டு வளம்பல வின்புற நோக்கி
எருசலே மாலயப் பணிக்கு முன் னாக்கிக்
காட்டு மிரத்தினக் கற்களின் சோதி
கண்ணன் பொன்னேமி யொளியினை யோதிக்
கூட்டு மிரத்ன புரியினைக் கண்டே
குறுகியே சீதவாக் கைப்பெயர் கொண்ட
சேட்ட மிகும் அவி சாவலைச் சந்தி
தேருநல் வாசச் சரக்குகள் முந்தி 36

அந்நிய நாட்டினர் தம்மை யருட்டி
யழைத்த சேதிக டன்னைத் தெருட்டும்
இன்னும் பலபல ஞாபகந் தன்னை
இப்பாதை வீரருந் தப்பா தெழுப்பி
மின்னுஞ் சீர்க்கிரி லப்பனைப் பாலம்
மேவினர்: சரித்திர மித்தை நிறுத்தித்
துன்னுமத் தேவர்தம் நாமந் தொனிக்குந்
தொன்மைத் தென் பாக மரதனைச் சொல்வாம். 37

## தென்றிசை மரதன்

### வே று

தென்னிலங்கை யிராவணனை யெண்ணும் போதே
தேவரையுங் குற்றேவல் கொண்ட சேதி
முன்னு திக்குந் திருமேனி முழுதும் நீறு
முப்புரங்க ளெரித்தவனின் பக்தி மூட்டும்:
கன்னலையும் வென்றொளிரு விளரிக் கீதம்
கண்ணுதலைக் கைலையுடன் காவச் சொல்லும்:
இன்னிசைக்குத் தலைவனென எவரும் போற்றும்
இருடியாம் நாரதனு மிவனுக் காற்றான். 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரமிகு ராமனது சீதை காதை
திசையனைத்து மிசைபரப்பிச் சிறப்புச் செய்த
வீரமிகு நகரிலங்கை வேந்த னென்று
விருத்த மெனுங் கவிக்கடலை விழுங்கு கம்பன்
பாரமிகு காவியத்திற் பாடிவிட்டான்
பழங்கதைக ளாராயக் கற்றோ ருண்டு
சூரன்மிகு வலிகெடுத்த முருகன் க்ஷேத்ரந்
தூயகதிர் காமத்தின் தொன்மை காட்டும். 39

வளம் பெருக்கும் மாணிக்க கங்கையுண்டு
மாகமமோ பண்டையநாள் மரதனோதும்
களம்பெருக்கு கைமுனுவை யன்னான் றந்தை
கவந்தீச னாதியரைக் கவர்ந்த துண்டு
பழம் புகழிற் பழுத்த தமிழ் மன்னர்க் கஞ்சிப்
பயந்தவரைக் காத்தபல வரண்க ளுண்டு
உளம் பெருக்கு மானந்த மூட்டு மிந்த
உறுகுணையிற் றீவாந்ர மோங்கியுண்டு 40

விண்ணவரும் பொன்னாடு விட்டு வந்து
மேவினதை யித்தேவி நுவரை காட்டும்
வெண்ணெயுடன் கோபிகைய ரன்பை யுண்ட
விஷ்ணுபிரா னாலயமும் விளங்கவுண்டு;
கண்ணெனு நம் மிலங்கைதனை முன்னோ ரின்னான்
காவலிலே யொப்படைத்த கதையு முண்டு.
பண்ணெனலாம் மட்டுநகர் மரத னோட்டம்
பாங்காகத் தொடங்கி யொரு நாளின் பின்னர் 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களன்னை ஜே இலங்கா" வென்று வாழ்த்தும்
இசை பரக்கச் சிறிசேன சேகராவும்
மங்களமார் தூதெடுத்து மாண்பு வாய்ந்த
மாத்தறையைக் கடந்துமகிழ் பூத்து நாளுந்
துங்கமுறு கடற்றெய்வந் தொழும்பு செய்யுந்
தொல்லரணை யியற்கையிலே புல்லப் பெற்று
வங்கமுறு யவனர்கள் கிரேக்க ரான
வையகத்து மக்க ளெல்லாம் வந்து கூடி 42

எங்குமுள பொருட்களிலும் பண்ட மாற்றும்
இபின்பத்துட் டாவினது எழில் யாத் திரையும்
சிங்கோவின் சிலாசனமும் சிறப்பு வாய்ந்த
சிங்கார நந்தவனச் சீருந் தேர்ந்து
பங்குபெற வந்திடுவொல் லாந்த ராட்சிப்
படைப்பினுக்கோர் சின்னமெனத் துன்னப் பெற்றுப்
பொங்குகடல் வளங்க ளெல்லாம் பொலியப் பெற்ற
பூங்கான லம்பதியாம் காலி நோக்கி 43

நெஞ்சார நெய்தனில வளத்தைக் கண்டும்
நிரைதங்கு சங்குதெங்கு நேர்த்தி கண்டும்
எஞ்சாத காலுகங்கைச் செல்வ மெல்லாம்
இழுத்தொதுக்குங் கழுத்துறையின் எழுச்சி கண்டும்
மஞ்சளவு விமானமெழு ரத்ம லானை
வளங் கண்டும் தெகிவளைநற் பாலஞ் சேர்ந்தார்
விஞ்சுதிரி லோகமதின் நெஞ்சை யள்ளும்
மேன்மைசேர் கொழும்பினது மரதன் சொல்வாம். 44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடதிசை மரதன்
## (கொழும்புமா நகர்ச் சிறப்பு)

ஈரேழா முலகமுமே தேவர் போல
இமையாத நாட்டமுட னிருந்தே யுந்தன்
சீரேறு கவின்காணச் சித்தங் கொண்டாற்
செப்புவதென்! நின்பெருமை யிலங்கா தேவி
நீரேறி நிலமேறிப் பட்ட தெல்லாம்
நின்றனரும் பொலிவனப்பை நேசித்தன்றோ!
காரேறி வளம் பெருக்கக் கங்கை பாயும்
'கற்பகநாட் டணிநகருங் காணா தன்றோ 45

### வேறு

பண்டிருந்து தமிழ்வளர்த்த பாண்டிமன்னன்
மதுரை யொடு வந்தானென்கோ!
தெண்டிரைசூழ் துவாரகையைச் செங்கண்மா
லிவ்விடத்தில் சேர்த்தா னென்கோ!
கொண்டிருந்த வச்சிரக்கைக் கோமானுந்
தன்பதியைக் கொணர்ந் தா னென்கோ!
கண்டிருந்த கொழும்புநகர்க் கவினுரைக்கக்
கம்பனுமே கலங்குவானே. 46

### வேறு

முத்தமிழ் வளர்ப்பார் மன்றம்! முறையது வழங்கு மன்றம்!
சித்திரச் சிற்பர் மன்றம்! செய்யபா ராளு மன்றம்!
பத்தரைப் பைம்பொன் மன்றம்! பாவலர்க் குரைக்க வொண்ணா
வெத்தனை மன்ற முண்டோ வவைக்கிட னீங்கு தானே 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

மருவிவரு தாய்நிகர்மா வலியி னாற்று
        மணலெண்ணி மணங்கெழுகாண் மலரை யெண்ணிப்
பொருவிலுடுக் கணமெண்ணிப் புலவர் சொன்ன
        பொன்னுவமப் பொருளெண்ணிப் புகன்றிட்டாலும்
பெருகுகடல் தரைமலைசேர் திரவி யங்கள்
        பிரித்தறிய முடியாத பெற்றி முற்றித்
திருமருவும் கடை வீதிச் சிறப்பைக் கூறச்
        சேடனிவண் வந்தாலும் செப்ப மாட்டான் 48

ஏற்று வட பால்கிழக்குத் தெற்கு வென்றே
        ஈழமணித் தேவிதிசை யெழுந்த வீரர்
போற்றுகின்ற மேற்றிசைக்குப் புறவா யில்லோ
        பூங்கங்கை யமுனை சரஸ் வதியோ! வென்று
சாற்றுகின்ற விக்ரோறிய்யா கிரிலப்போனா
        தரத்திலுயர் தெகிவலைநற் பால மூன்றும்
தேற்றமுறு திரிவேணி சங்க மென்னச்
        சிறப்பமைந்த கொழும்புமா நகரைச் சேர்ந்தார். 49

## காலிமுகம்

கதிரெறியு மதிநலனைப் பழித்த முத்துங்
        கண்ணபிரான் நன்னேமி கவரு பொன்னும்
அதிரவரு மலைகடலி னுரையை வென்ற
        அலங்காரப் பட்டுடையும் அணிந்து கொண்டு
உதிருகனிச் சுவைமொழி கூர் கொழும்புக் கன்னி
        உவாமதிபோ லொளிர்வதனத் திலக மொத்த
துதிபரவு காலிமுகம் நின்ற சில்வா
        தூதெடுத்து நான் மணிக்குத் தொடங்கி னானே. 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுடனே கான்மணிதான் முன்னர் வந்த
ஏத்து புகழ் முப்பகுதி மரதர் தாமும்
தவப் பயனைப் பெற்றவர் போல் 'ரொறிங்டன்" சந்தி
சால்புறவே சார்ந்திட்டார்: நின்ற மக்கள்
புவனமெங்கும் பொங்குகட லெழுந்த தென்னப்
பூத்துவகை கொண்டுகூத் தாடி நின்றார்;
பவனனுமே யிவர்க்குதவி செய்தா னோட்டம்
பார்க்க வந்தார் சேதிசில பகர்வாம் மன்னோ! 51

## (பார்த்தோர் பரிமளிப்பு)
### வேறு

மந்தர மாமலை வென்ற புயத்தினர் மரதன் வீரர்கள் பார்!
அந்தர மீதர விந்த மலர்ப்பதம் அமரர் நிகர்க்குது பார்!
விந்தை சேர் வட்டுடை விட் டொளி வீசிட விடுவிடு எனல் போலப்
பந்தய வீரர்கள் வந்திடு பான்மையைப் பார் பார் என்றனரே 52

கடையுக வெள்ள மெனச் சனர்குழுமிக் கலகல வெனு மோசை
அடையுற வானவர் கோனுமங் கஞ்சி யாயிரம் விழிகளிலும்
படபடவெனக் கனல் கக்கிடக் பார்த்தனன் பண்புறும் லங்கையிலே
சுடசுட வொளி விடு பொன்போற் சுதந்திர மென்று துணிந்தனனே.
53

மேற்றிசைக் கடலு ளருக்கனுஞ் சென்று வீழமுன் வேகமதாய்
நாற்றிசை நின்றுமே நண்ணிடு வீரர்தம் நற்செய்தி யேதெனவே
சாற்று ந லோகையொ டியாவரு முந்திடச் சாகரத் தாழ்ந்தது போல்
மேற்றிசை நின்று தவித்தது முன்னவன் மேவிய வெற் பெனவே 54

சனத்திரள் வெள்ளந் தாண்டிட வனுமன் றன்வடிவெடுத்திலமே
மனத்திருள் சீத்திடு வாமனன் வடிவும் மாண்புறப் பூண்டிலமே
நினைத்துமே சித்திரப் பாவைபோல் நின்றனர் நெஞ்சினி வீர
மில்லாப்
பனித்துளி வாழ்வை யெடுத்தது வீணெனப் பல்லவி பாடினரே
55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரமண்டப சோதி

### வேறு

அயன்படைத்த படைப்பினிலே நயன் படைத்த படைப்பெல்லா
மமையத்தீட்டி
மயன் படைத்த சுதன்மையதோ! மஞ்சுதவழ் பொன்மேரோ!
வொலிம்பிக் குன்றோ!
பயன்படைத்த பருதியுமே தன்னொளியைப் பறிகொடுத்துப்
பதறுமென்றால்
வியன்படைத்த சுதந்திரமா மண்டபத்தின் சோதிதனை
விளம்பற்பாற்றோ 56

## மண்டபத்தில் பிரதமர்டி.எஸ். சேனநாயக்கா அவர்களும் மற்றும் பிரமுகர்களும் வீற்றிருந்த தேசு

பார்கொண்ட சீர்த்தி யெல்லாம் படைத்தொளிரும் 'ரொறிங்ரன்
'மா சதுக்கத் தந்நாள்
சீர்கொண்ட சிங்கவே றெனுந்தீர னரசியலின் தீர்க்கஞானி
ஏர்கொண்ட நற்சேன நாயக்கப் பிரதமர் தான் இருந்த தேசு
ஊர்கொண்ட திங்களுக்கே யொப்பிடினு மிக்கெனவே
யுரைக்கலாமே 57

## பல்வகைக் காட்சிகள்

### வேறு

மட்டடங்கா வணிவகுப்பு வளைக ளூரும்
வயனிறைந்த நென்மணியின் வரிசை மானும்:
அட்டதிக்கு யானைகளு மஞ்சத் தக்க
அதிர்வெடிகள் முகிலிடியை யடக்கி நிற்கும்
வட்டமிடும் அகல்வான ஊர்தி கள் அவ்
வானவர்க்கே சேதி சொல்லி வருத லொக்கும்:
கட்டுரைக்க முடியாத கண்டிநாட்டுக்
களிநடனந் தேவரையுங் கவர்ந்தி ழுக்கும் 58


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிக் காட்சி

அறு நூற்றொடைம்பதெனும் மைல்க டாண்டி
யாயிரத்தொ டிருநூறு மரதன் வீர
ருறு காற்று வேகமுட ன் ஓடிவந்த
உடற்களைப்பை யாற்றவென வுச்சிக்கேறி
மறுமாற்ற முரையாது பரிதி தன்னை
வழி மறித்துத் தடுப்பனபோற் றுவச மெல்லாஞ்
சிறு காற்றும் வீசாத போது மாடிச்
செயற்கரிய செயலாற்று திறந்தா னென்னே! 59

## இராக் காட்சி

### வேறு

கழுதுமங் கொழித்துக் கண்ணுறங் கிடுமக்
காரிருள் சூழ்தரு சாமப்
பொழுது நம் மரதர் துணிவுட னோடப்
புண்ணியஞ் செய்தநம் மக்கள்
பழுதருந் தீபம் பலபல வேற்றிப்
பகலெனச் செய்திடப் பார்த்தோர்
எழுதரும் அண்ணா மலையிற் கார்த் திகையில்
இடுவிளக் கொளியென வயிர்த்தார். 60

## கடைசியோட்டம்

### வேறு

பெருகு புகழ்ச் சிங்களவர் தமிழர் முஸ்லீம்
பேர்களிலே பேராண்மை பெற்ற நான்கு
திருவினிய சோதரராம் ஒஸ்கார் விஜய
சிங்க சான் டேஸ் செரீப் பிளேக்கா மென்பார்
வரை பொருது தோளோடு தோளைச் சேர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரடி வைத் தொரு மனதாம் வேகத்தோடு
மருவினிய மரதனஞ்சற் றூது கொண்டு
மகிழ்வுடனே நான்கேகால் மணியிற் சேர்ந்தார். 61

வரம் பெற்ற மகிழ்ச்சியோடு நானூற் றின்மேன்
மங்கையர்க ளூர்வலமா யழைத்துச் செல்ல
வுரம்பெற்ற சுதந்திரமா மண்ட பத்தே
யும்பர் பதி ரம்பையரி னுருவை வென்று
நிரம்புற்ற பேரழகுச் சுவர்ணஞ் சாலி
நேய சிரோ மணிப் பிலீஸ் மாதர் நால்வர்
கரம் பெற்றுக் கார்பெற்ற மயில்க ளொப்பக்
கரைகாணாக் களிநடனக் கடலு லாழ்ந்தார். 62

## மரதன் அஞ்சல் வீரரை யெதிர்நோக்கி மண்டபத்திருந்தோர்

### வேறு

விண்ணை யளக்கு மண்டபத்தே மேன்மைக் கவர்ணர் வீற்றிருக்க
மெய்யும் மனமுஞ் சலிக்காது வீராவேசத் தோடுழைத்துக்
கண்ணி னினிய சுதந்திரமாங் கனியை நாமுஞ் சுவைத்திடற்குக்
கத்தி யின்றித் தந்திட்ட கலைஞன் சேன நாயக்க
அண்ண லோடு மதியமைச்சர் அரசாள் மன்றத் தங்கத்தோ
ரான தேசத் தலைவர்மற் றன்பரெல்லாங் காத்திருக்கப்
பண்ணி னினிய சொற்கெட்டாப் பண்பார் மரதவீரர்வரப்
பறவை பார்ப்புக் கண்டமைபோற் பாடமுடியா மகிழ்வுற்றார்.
63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

திரையெறிந்து முத்தொதுக்குங் கடல்க டாண்டிச்
செஞ்சாலி விளைந்து பொலி பழனந் தாண்டிப்
பரிதியையும் வழிமறிக்கும் வரைக டாண்டிப்
பாய்புலி சிங் கேறரவு வனங்கடாண்டிக்
கரையிலரு முணர்ச்சி வெள்ளம் பொங்கித் தூண்டக்
காட்சி நிறை மாகாண மொன்பான் கண்டு
பொருவரிய நாடுநகர் மான்மியத்தின்
புதுமையொடு பழமை யெலாம் பொருந்தச் சேர்த்து. 64

செந்தமிழுஞ் சிங்களமு மரபு மெல்லாத்
திசை வழங்கு மாங்கிலமுஞ் சேர்ந்த நான்கு
சுந்தர நற் பாஷைகளி லெழுதி வைத்த
சுபசெய்தி தரு மேட்டைப் பிரித்துத் துன்னும்
இந்தாழி சூழ்தரு நம் மிலங்கா தேவி
யீன்றமக்கள் யாவருமோர் சாதி; யெம்மில்
எந்த வகை யாலுமனப் பேதமில்லை
எங்களுடல் பொருளாவி யாவு மீந்தே 65

சந்தமுந் தாய் நாட்டைக் காப்போம் சாருஞ்
சஞ்சலங்க ளத்தனையுஞ் சகிப்போம்; எங்கள்
சிந்தனை சொற் றூய்மையுறு தலைவ ரேறே!
தெரிந் தெடுத்த தந்தையரே! கிரேக்க தேச
நிந்தையிலா அதீனியரைப் போல நின்று
நெஞ்சார மகிழ்மின்! வெற்றி யெமதே யென்று
முந்தவரு பணிவினொடு உவந் தளித்து
முறை முறையே வாசித்து முதல்வ னான 66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தலைவன் சேனநா யக்கன் முன்பு
செங்கமலக் கரம் நீட்டிச் சேர்த்த போது
கருத்துடனே கண்களிக்க மிதிலை தன்னிற்
காகுத்தன் சீதைகணை யாழி பெற்றுப்
பெருத்த மகிழ் வுற்றனன்போ லானான்: காணப்
பேறுபெற்ற மக்களெலாம் பெரிதுமார்த்தே
யருத்துமமு துண்டவர்போ லானார் வானோ
ரானந்தக் கற்பகப் பூ மாரி பெய்தார்.
67

## செய்திச் சுருளைப் பேழையுள் வைத்துச் சுதந்திரச் சதுக்கத்து ளிடல்

### வேறு

நன்றெனப் பெற்ற தூதை நவமணி குயிற்றிச் செய்த
மன்றலம் பேழை தன்னுள் மருந்தென வைத்து மேரு
குன்றென நிருமா ணிக்குஞ் சுதந்திரக் கோயில் தன்னுள்
நின்று நீ டோங்க வென்று நிலப்பொழி வெட்டி யிட்டார் 68

## 133 புறாக்கள் வானத்திற் பறந்தமை

சிறக்கவிச் சேதிதன்னைத் தேவர்க்கும் செப்பு மா போல்
மறக்கருஞ் சீர்த்தி பூண்ட வள்ளுவ ரெழுந்தா லொத்த
முறைக்கியை புறாக்க ளூற்று முப்பத்து மூன்று வானிற்
பறக்கவே செய்தா ரர்த்தம் பலருமிங் கறிந்த தாமே 69

## சூரிய அஸ்தமனம்

அண்டரே வாழ்த்தி நிற்கும் அளகைக்குங் கிட்டா வீழ
மண்டலச் சுதந்திரத்தின் மரதன் சீர் மாலை யென்னும்
ஒண்டொடி மனையாட் கோடி யுரைப்பபோற் பருதியென்னும்
திண்டிறற் கொழுநன் மேற்குத் திசைக்கடல் சென்று சேர்ந்தான். 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரோதயம்

பொங்குபாற் கடலிற் தோன்றிப் பூவைபங் காளனான
சங்கரன் சடையினின்று தண்கதிர் பரப்புஞ் சீதத்
திங்களஞ் செல்வன் றானுஞ் சேனையா முடுக்கள் சூழ
மங்கள மரதன் காண்பான் வான்திரை கிழித்து வந்தான் 71

பன்னகத் துன்பமில்லை: படுமுயற் களங்க மில்லை:
முன்னமத் தக்கன் சாப மொழியது மில்லை: சூழ
மன்னகர்ச் சுதந்தி ரத்தின் மரதன் சீர் காண்பான் வேண்டிப்
பொன்னகத் தின்ப மெய்தப் போந்ததண் மதியத் திற்கே 72

## மக்கள் மகிழ்ச்சி

### வேறு

பண்ணோ பெருந் தவஞ் செய்தது பருகும் புகழ் பாடக்
கண்ணோ பெருந் தவஞ் செய்தது காணுங் களிகூட
விண்ணோ பெருந் தவஞ் செய்தது மேவிப் புவிநாட
மண்ணோ பெருந் தவஞ் செய்தது மரதன் புகழ்நீட 73

நன்றேதெரி நந்தலைவர்க ணாடிப்புரி செயல்க
ளொன்றோபல வென்றேயுரைத் தோஓ வெனப் புகல்வார்
குன்றே வரு சுடரேயெ னக் குலவும்மர தன்சீ
ரென்றோ வினிக் காண்போ மணி யீழத்தினி தென்பார். 74

தொல்லாயிர நயனங் கொடு சூ ழ்முகில் வாகன னும்
சொல்லாயிர நாச்சேடனுந் துன்னும் பதி விடுத்தே
யெல்லாயிரஞ் சுடர்கூடினு மேற்றம்பெறு மரதன்
பல்லாயிரஞ் சீர் பாடிடப் பார்த்தாடிட வந்தார். 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே று

அண்டரும் வாழ்த்து மென்பார்! அகிலமும் போற்று மென்பார்
தொண்டரும் பாடு மென்பார்! சூழ்ந்துகொண் டாடுமென்பார்!
கண்டதே போது மென்பார்! கண்பெற்ற பயனீ தென்பார்!
மண்டபஞ் செய்து தந்த மரதனே வாழ்க வென்பார். 76

பாடிநின் றார்கள் சில்லோர்! பாலமு துண்டார் போல
ஆடிநின் றார்கள் சில்லோர்! ஆனந்தம் ஆனந்த மென்
றோடிநின் றுரைத்தார் சில்லோர்! உம்பர்க்குங் கிட்டாதென்றே
கூடிநின் றார்த்தா ரென்றால் என்கொ லோகூற லீங்கே. 77

## இலங்கையின் நானிலங்களிலும் இச்சேதியினுவகை நெய்தனிலம்.

வே று

கடலணங் கென்பாள் தன்றிரைக் கரத்தாற்
கட்டியே முத்தமிட் டாடும்
வடபதிப் பருத்தித் துறைமட்டக் களப்பு
மருவுதி வாந்திரங் கொழும்பில்
தடவரைப் புயத்து மரதநற் றாதர்
தாவியே யோடிடத் தானே
வடமுகத் தீயுங் குளிர்ந்தது மணிமே
கலையுந்தன் மனமது மலர்ந்தாள். 78

பண்டைய சகர புத்திரர் தொட்ட
பாரித்த சாகரத் துற்ற
விண்டொளிர் தரள பவளவா னந்து
வேறுள நிதியெலாம் வாரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டருங் கலத்தி லேற்றியவ் வருணன்
குலவுநற் றுறைகளிற் கொடுத்துத்
தெண்டிரைக் கரத்தா லணைத்திட வாயு
தேவனுஞ் சேர்ந்துவந் தனனே. 79

உப்புமீ னுணக்கல் விற்பவ ரோசை
யுலவுசங் கினங்களி னோசை
செப்படு கொங்கைக் கயல்விழிச் சேர்ப்ப
தேவியர் சிலம்பொலி யோசை
துப்படு வானைத் துளைத்ததே யென்னத்
தொடக்க நாற்றிசை தொறுந் துன்ன
மைப்படு கடல்கார் வண்ணனு மீழ
மரதனை வாழ்த்தினன் வந்தே. 80

## முல்லை நிலம்.

### வேறு

கொற்ற நேமி நெடுமால் வாழ்த்துக் குலவக் குரவைக் கூத்திடும்!
சுற்று முற்றுங் கண்ணன் வண்ணந் துலக்கிக் காயாப் பூத்திடும்!
மற்று மாதர் நகையை வெல்ல மௌவல் முறுவல் செய்திடும்
குற்ற மற்ற பொன்னை வென்று கொன்றைப் பூக்கள் பெய்திடும்! 81

சிங்கம் வரிகள் கரிகள் நரிகள் தீங்கு செய்யா நீங்கிடும்!
துங்க மானும் புலியுஞ் சேர்ந்தோர் துறையி னீரை வாங்கிடும்!
கங்குல் பகலாய்ச் சிறக டித்துக் கானச் சேவல் கூவிடும்!
எங்கும் நற்சா தாரி யோசை யெழுந்து வானைத் தாவிடும்! 82

கொன்றைக் குழல்கொண்டூது மோசை குரவையோசை கோவலர்
சென்று மந்தை யுரப்பு மோசை தேரு மாய மாதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றினாளுந் தயிரை யெத்தும் மத்தி னோசை வானையுந்
துன்றித் தாக்க மரதர் கேட்டுத் துரிதமாக வோடினர். 83

## மருதநிலம்.

### வேறு

பருதிவாம் பரிக்கு முற்ற பசியதைப் பரிந்து மாற்றக்
கருதிய தென்ன வோங்கிக் காட்சிசேர் செந்நெ லீட்டஞ்
சுருதியாய் முடியைத் தாழ்த்தித் தூதர்க்கு வணக்கஞ் செய்ய
வரிசையாய் நிற்ப போன்ற மகிழ்வினைக் காட்டி நிற்கும் 84

வாவியிற் பொருத சேல்கள் வானுறத் துள்ள லாங்கே
மேவிய மரத னோட்டம் விருப்புறக் காணல் போலும்:
தாவியே செங்கால் அன்னந் தாமரைப் பூவை யேந்தித்
தூவியே பாத சேவைத் தொழும்பினுக் கெழும்பிச் செல்லும். 85

ஆறுபா யரவந் தெம்மாங் கார்த்திடு முழவ ரோசை
தேறுமவ் விந்தி ரற்காய்ச் செய்விழா வோசை கேட்கும்
கூறலென் னானு மேதிக் கூட்டமுங் கன்று காணப்
பீறுபால் குண்டம் போன்ற பெருமடி பெருக்கி நிற்கும் 86

## குறிஞ்சி நிலம்.

### வேறு

மால் வரைகள் சூரியன் றேர்ப் பாதைவழி மறிக்கும்
வந்து நின்று சந்திரனுஞ் சிந்தி நில வெறிக்கும்
பால் புரையு நீரருவி பாய்ந்து குதித்தோடும்;
பகீரதியோ வென மயங்கிப் பாவை பங்கன் நாடும்
சேல் விழிசேர் அரம்பையருஞ் சென்று சுனை யாடும்
சேயவனை வாழ்த்தி வெறி யாடலிசை கூடும்
வேல் வீசித்த வேடுவரும் விண்ணவரை க் கண்டே
விருந்தாடி வருங்கோடி வெற்புமிக வுண்டே 87


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமுனிவர் வாழுசிவ னொளிபாத மொன்றே
    சாதிமத பேதபிணி நீக்குமருந் தென்றே
புவன மெங்கும் போற்றிவரும் பொற்புடனே யோங்கும்
    போதுமென வாதவனின் புதுமை யெல்லாந் தேங்கும்
குவளைபழி விழிமாத ராடவர்கள் வாழ்த்துங்
    குரலொலியோ கடல் காற்றின் குமுறலெலாந் தாழ்த்தும்
உவகையொடு கனிகள் பறித் தோடிவருங் கடுவன்
    ஊடலுறு மந்திதனைக் கூட்டி நிதமிடுவன். 88

மரகதநற் பாறைமிசை வேய்முத்தஞ் சிந்தும்
    மாமலையின் முக டொடிய வாணிடியும் உந்தும்
திரையெறிந்து மாவலியுஞ் சென்று சுருண் டோடும்
    தேயிலைநல் றப்பர்மணந் தென்றலொடு கூடும்
கரைகடந்த வளன்பல வுங் கடைத் தெடுத்து வந்து
    காதளவு நீண்டவிழி மாதர் பல தந்து
மரதனஞ்சல் வீரர்கள் பாய் துரகமென வோடி
    வருவழியிற் காணிக்கை வைத்தனரே பாடி. 89

## நானிலச் சீரும் மரத னஞ்சல் சீரும் ஊர்காவற்றுறைப் பாராளுமன்றப் பிரதி நிதியாகிய ஸ்ரீ ஏ. எல். தம்பி ஐயா அவர்களின் பொற்கிழிச் சீர் போல எங்கும் பரவியது

### வேறு

கண்ணெனவே பாவலரைக் கருதுளத் தோன்: கற்பகம் போற்
    கனிந்த கையான்
நண்ணுமுயர் தம்பிஐயா நற்றவத்தோன்: நாடாளுமன்றச் செம்மல்
எண்ணும் பொற் கிழியளித்த இசை பரவிச் சென்றமைபோ
    லிலங்கை மாதா
புண்ணிய நா னிலச் சீரும் பொன்மரதன் சீருடனே பொலிந்த தம்மா
90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரதனஞ்ச லோட்டத்தின் படிப்பனை

### வேறு

ஊக்கமுட னிந்தவகை யோடி வந்த
ஒவ்வொருசிற் றங்குலமு முரைக்க வொண்ணாப்
பாக்கியஞ் சே ரீழமணித் தேவி தன்னின்
பண்டையவீ ராயிரத்தைஞ் ஞூற்றின் மேலே
நோக்கரிய வாண்டுகளின் மான்மியத்தை
நுண்மதியிற் றண்மதிபோ னுழைத்த தென்றால்
ஆக்கரிய நம் முன்னோர் செய்த நாலெட்
டறப் பயிரின் விளைவெனவே யறையலாமே 91

தலங்காணாக் கடல்பெருகி வந்த போதுஞ்
சஞ்சலங்க ளஞ்சாத சகிப்புத் தேனுங்
கலங்காத தியாகமெனுங் கருப்பஞ் சாறுங்
கடலமுதைக் கரையெடுத்து வைத்த போன்ற
நிலங்காணு மொத்துழைப்புங் குழைத்துக் கூட்டி
நெஞ்சொத்த காவலரா மிலங்கைச் சர்க்கார்
நலங்காணு மீழமணித் தேவிக் கீந்த
ஞானமுறு தூதின து நயந்தா னென்னே! 92

கலை யெடுத்த 'சோக்கிறற்றீஸ்' ஆதியான
கண்ணினிய ஞானிகளைப் பெற்ற நாட்டிற்
தலையெடுத்த "பீடிபைடிஸ்" என்பா னோடித்
தானெடுத்த மாமரத னோட்டத் துற்ற
விலை யெடுத்த சிறப்பெல்லா மிதுவும் பெற்று
விளங்கினதே யென்றாலும் வெற்றியல்ல
அலையெடுத்த கடல்புடைசூ ழிலங்கை மக்கள்
அயராத வொத்துழைப்பி னழகி தாமே. 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுவன

இத்தகைய வொத்துழைப்பு வளர வேண்டும்
எல்லோருஞ் சோதரரென் றெண்ண வேண்டும்
சுத்தியின்றிப் பெற்ற சுதந் திரத்தை வானக்
கற்பகம் போற் கண்மணி போற் காக்க வேண்டும்:
முத்தமிழுஞ் சிங்களமும் ஆங்கி லம்மும்
முழு மதிபோற் கதிர்பரப்பும் முறைமை வேண்டும்:
எத்தொழிலும் வாணிபமும் பெருக்க வேண்டும்:
எம் பெருமான் சித்தமினி திருக்க வேண்டும். 94

## நாடும் நாமும்

சாற்றுமிரு நிதிக்கிழவ னாண்ட நாடே!
தசமுகனுக் கமரர்தலை சாய்த்த நாடே!
போற்று கின்ற கைமுனு எல் லாள மன்னர்
புகழோங் கிப் பரிமளித்த புனித நாடே!
ஏற்றமுறு மேநாட்டார் இதயம் ஈர்த்தே
யெல்லோரும் சமனென்று பார்த்த நாடே!
நாற் றிசையும் விரிபுகழிற் பூத்துப் பூத்து
நறு மணத்தின் தென்றலுலாப் போந்த நாடே! 95

பொன் விளைந்த பூமியெனப் போற்று நாடே!
பொருதுகின்ற வாழ்க்கையலைக் கஞ்சா நாடே!
என்னருமைத் தந்தை தாய் வாழ்ந்த நாடே!
ஏதிலர்க்குங் கதவடையா தேற்ற நாடே!
உன்னருமை யன்பினுக்காய்த் தவிட்டை உண்போம்
ஊசி புகாக் கந்தையையு முடுத்தி நிற்போம்
நின்னருமைச் சுதந்திர நல் வாழ்வி னுக்கே
நிச்சயமா யொளி கொடுத்து நிலைக்கச் செய்வாய். 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தடர்க்கு மதகரியை யொருவன் கேட்பான்;
காந்தி மகான் கைராட்டி மொருவன் கேட்பான்;
பந்தமிலாப் படகுதனை யொருவன் கேட்பான்;
பாரதியின் வீரமுர சொருவன் கேட்பான்;
சந்தமும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்;
சரியென்றால் துரிதமுடன் தீர்க்க வேண்டும்;
அந்த மிலா நன்மையெலாம் ஆகும் நீதான்
அடைந்திட்ட சுதந்தி ரத்தின் அருமைபேணின். 97

## எதிர்கால இளைஞர்களுக்கு...

சுத்தமுறு மீழ மணித் தேவி பெற்ற
சுகுமார விளைஞர்களே! சொல்லக் கேண்மோ!
கத்துகடல் தனிற் கானங் கேட்கி லீரோ!
கலைமானின் நிழலாட்டங் காண்கி லீரோ!
கொத்தலர்ந்து மலர்மணந்தான் வீச லின்றோ!
குருகினங்கள் கூண் டிருந்து கொஞ்ச லின்றோ!
அத்தனையும் பார்த்திடு நீர் சுதந்திரத் தாய்
ஆனந்த மடியிருந்து மஞ்ச லென்னே? 98

பருதிதனைப் பார்த்து வௌவால் கேலி செய்யும்
பான்மையென வருகிருந்தார் பழிப்ப ரேனுங்
கருதிடினிங் கெதிர்காலம் நுங்கள் தங்கக்
கைகளிலே யிருப்பது தான் கண்ட வுண்மை:
சுருதி மொழி தவறாத தூய்மை வாய்ந்த
சுதந்திர மாம் வெள்ளத்தைத் துணிந்து தன்கை
விரலத னாற் றடுப்பவரு முண்டோ? நீவிர்
வீரமன வுணர்ச்சி பொங்க விழிமின்! இன்னே! 99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தின் பீடுநடை போட வேண்டும்:
தேசத்தின் புகழெடுத்துப் பாட வேண்டும்:
சங்கத்தின் முன்னின்றே யுழைக்க வேண்டும்:
சகல கலைப் பயிரெங்குந் தழைக்க வேண்டும்:
தங்கத்தின் புடமெனவே யிலங்க வேண்டும்
தனியொருவன் உணவின்றிக் கலங்க நேரின்
அங்கத்தை யரிந்திட்ட 'சிபி' யின் வண்மை
ஆண்மையுட னடைந்து புகழ் பூண வேண்டும். 100

எங்கள் மணி இலங்கையிலும் அழகு வாய்ந்த
இடமெந்த உலகத்து மில்லை: இல்லை:
பொங்கிவரும் அன்புண்டு: இன்ப முண்டு:
பொய்யாமை தீமைகள்செய் யாமையுண்டு:
துங்கமுறு நீர்நிலைகள் மலைக ளுண்டு
துதிபரவும் பாவலர் நா வலர்க ளுண்டு:
அங்கமுட னாவிபொருள் அன்னைக் கீந்தே
அமரர்வாழ் வீங்கெய்தி வாழ்க மன்னோ. 101

## வாழி

பொன்னான ஈழமணித் தேவி வாழி!
பூரண நற் சுதந்திரத்தின் பொற்பு வாழி!
சொன்னாலே போதுமென்ற பெருமைவாய்ந்த
துங்கமுறு மரதனஞ்சற் தூதைத் தந்து
பன்னாளும் பாடிவரச் செய்தார் வாழி!
பாக்கியஞ் செய் மக்களுயர் பண்பு வாழி!
இந்நாளில் நாமடைந்த ஞானம் வாழி!
இறைவனருள் வழியெவரும் வாழி! வாழி! 102


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசு பெற்றதையிட்டு பாராட்டியதில் சில பதிவுகள்

01) ஈழமணித் திருநாடு சுதந்திரம் பெற்றபின் மரதன் ஓட்டம் ஒன்று வைத்தனர் 1949 ஆம் ஆண்டில் மரதன் ஓட்டம் பொருளாகக் கவி பாடிப் பரிசு பெறுமாறு ஆட்சியாளர் தமிழ் - சிங்களப் புலவர்களை வேண்டினர். முதல் பரிசினைப் பெற்றவர் வட்டுக்கோட்டை "முருகன் அகம்." முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள். புலவர் க.த. ஞானப்பிரகாசம் அவர்கள் இரண்டாம் பரிசினைப் பெற்றார். பாவும் பாவினமுமாக முதுத்தமிழ் புலவர் 108 பாடல்கள் பாடினார். புலவர் ஞானப்பிரகாசம் அதே பான்மையில் 104 செய்யுட்கள் பாடி இருவரும் அரசினாற் கௌரவிக்கப் பெற்றனர்....

**மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி நடராசா**
மட்டக்களப்பு

02) கந்தப்பு முதலி தவக் காளை யெழில்
இளையபிள்ளை கனிந்த செல்வன்
எந்தப்பேர் பெற்றவொரு புலவனுக்கும்
இளைக்காச்சிங் கறு துள்ளுஞ்
சந்தப்பா புனைசமர்த்தனர்; அரசு நின்
தகுதி தன்னை ஆய்ந்து
முந்தப் பொற் கிழியளித்துக் கௌரவித்த
முறைகண்டோம் முதிர்ந்து வாழி!

**கரம்பொன் கவிஞர் அ.யுவக்கீம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) எல்லாரும் புலவர்களோ ; இல்லை - இல்லை

யாவருக்கும் கவி வருமோ இல்லை இல்லை

சொல்லாரும் பாவலரின் வரிசை சேர்ந்து

துலங்கிடுநங் கவிவலுந! சுதந்திரத்தின்

மல்லாரும் விழாப்போதில் மரத னோட்ட

மாபெரிய கவிப்போட்டிப் பரிசில் பெற்றுத்

தொல்லாரும் தமிழருக்குப் பெருமை மாலை

சூட்டவந்த பேரறிஞ வாழி! வாழி!

**யாழ்/ கட்டைவேலி பன்மொழிப் பண்டிதமணி**
**ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளை.**

04) படிதாங்கும் உயர்தலைமை ஆசிரிய பதவியும்

பகர்பண்டி தப்பட் டமும்

பாங்குடைய வித்துவான் பெருமையும் மெத்துபுகழ்

பரவிய லங்கா தேவிக்

குடிதாங்கு சுதந்தரத் தினம் நினைவு கூர்ந்திடக்

குறித்தமர தன்போட் டியிற்

கோதிலாப் புலவரென வேசேன நாயக்க

கொற்றவன் தந்த பரிசும்

கொடிதாங்கும் ஆரியதி ராவிடபா ஷாவிர்த்திக்

குலவுசங்கத் திலக்கியம்

கொண்டுமிளிர் பாடல்தனில் முதன்மையும் நற்றேவ

குமரனைப் பெற்றே டுத்த

முடிதாங்கு தேவமா தாவுக்கு 'மலர்மாலை'

முன்னின் றிசைத்த வகையில்

மூதறிவு தேங்குபெரி யோர்மதிப் புங்கொண்ட

முதல்வனே நீ வாழ்கவே!

**யாழ்/ கரவை நாடகக்கலைமணி**
**எம். வி. கிருஷ்ணாழ்வார்**




அரச பொற்கிழிப் புலவர் / கவிமாமணி
*க.த. ஞானப்பிரகாசம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரதன் அஞ்சலோட்டப் புலவர்கள்

*முதுதமிழ்ப் புலவர், பண்டிதர் மு. நல்லதம்பிக்கு பொற்கிழி*



மரதன் கவிதை முதற் பரிசு ரூபா ஆயிரம் பெறும் முதுதமிழ்ப்புலவர் பண்டிதர் மு. நல்லதம்பி அவர்கள்



மரதன் அஞ்சலோட்டக் கவிப்போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்றுக்கொண்ட கரவெட்டி (வதிரி) திரு இருதய தமிழ்க்கலாசாலைத் தலைமையாசிரியர் திரு.க.த. ஞானப்பிரகாசம் அவர்கள்

சென்ற ஆண்டு சுதந் திர நினைவு விழாக் கொண்டாட் டங்களில் முதலிடம் வகித்த மரதன் அஞ்சலோட்டத்தைப் பற்றி கவிகள் யாக்கும் புலவர் களில் முதலிடம் பெறுபவர்க்கு பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார மந்திரியின் பாளிமேந்துக் காரியதரிசி திரு. ஆர். ஜி. சேனநாயக அவர்கள் ஆயிரம் ரூபா பரிசு அளிக்க முன்வந்ததை வாசகர்கள் அறிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி கவிதைப் போட்டிக்கு ஐம்பதினெண்மர் கவிகள் அனுப்பியிருந் தார்கள். இக்கவிகளைப் பரிசீலனை செய்து தீர்ப்பு அளிப்பதற்கு இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி கே. கணபதிப்பிள்ளை அவர்கள், யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. எஸ். நடேசன் அவர்கள், இலங்கை அரசாங்கத்தின் முதன் மொழிபெயர்ப்பாளராயிருந்து அண்மையில் இளைப்பாறிய திரு. குல. சபாநாதன் அவர்கள் அடங்கிய கோஷ்டியொன்று நிறுவப்பட்டது. மத்தியஸ்த கோஷ்டியினர் பண்டிதர் மு. நல்லதம்பியின் கவிதைக்கு முதல் ஸ்தானத்தையும் வதிரி திரு. இருதய தமிழ்க் கலாசாலையின் தலைமை ஆசிரியர், க.த. ஞானப்பிரகாசம் அவர்களின் கவிதைக்கு இரண்டாம் இடத்தையும் ஏகமனதாக அளித்தனர். யாழ்ப்பாணத்தில் கொக்குவில் வாசியான செல்வி நகுலேஸ்வரி அருணாசலத்தின் கவிதையும் நடுவர் குழுவின் பாராட்டுதலைப் பெற்றிருக் கிறது.

பண்டிதர் மு. நல்லதம்பி அவர்கள் கொழும்பு சஹிராக் கல்லூரியின் தலைமைத் தமிழ் பண்டிதராயிருந்து இளைப்பாறியவர்; தற்போது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தரிசக உபன்னியாசகருள் ஒருவராயிருந்து தமிழ்த்தகுதிப் பத்திரமாணவருக்கு தமிழ் இலக்கிய இலக்கணங்கள் போதித்து வருகின்றார். இவர் பல பாடநூல்களின் ஆசிரியராயிருப்பதுடன் செய்யுள்களைப் போலவே உரைநடையும் வெகு கச்சிதமாக எழுதவல்லவர். இவரின் தமிழறிவைக் கனம் பண்ணுவான் தென்னிந்திய தமிழ்க் கழகத்தார் முது தமிழ்ப்புலவர் என்னும் பட்டத்தை நல்கலாயினர். இலங்கைத் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் இந்த நல்லதம்பிதான்.

திரு. க. த. ஞானப்பிரகாசம் அவர்கள் நெடுந்தீவைத் தமது பிறப்பிடமாக உடையவர். கொழும்புத்துறை சஞ். சூசையப்பர் சாதனா கழகத்திலும் மட்டக்களப்பு சந்.அகுஸ்தீனார் போதனா கழகத்திலும் கல்வி பயின்று பயிற்சி பெற்றவோர் ஆசிரியர். பால பண்டிதர். இன்னிசைக் கவிஞராகிய சங். பீ. இன்னாசிமுத்து விறதரிடம் கவி எழுதக்கற்றுக்கொண்டார். இதனையிவர் திறம்பட விருத்தி செய்து பல போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெற்றிருக்கிறார். காலஞ் சென்ற உயர் திரு. விபுலானந்த அடிகளும், பிரம்ம ஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களும் நடத்திய ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் போட்டிப் பயிற்சியில் முதற் பரிசைத் தட்டிக் கொண்டார் இப் பிரகாசத்தார். இப் பரிசை காலஞ்சென்ற வித்தியாதிபதி திரு. எச். எஸ். பெரரா அவர்கள் பல்லோர் முன்னிலையில் இவருக்கு வழங்கலாயினர்.

ஸ்ரீலங்கா, பண்டிதர் மு. நல்லதம்பி அவர்கள், திரு. க. த. ஞானப்பிரகாசம் அவர்கள், செல்வி நகுலேஸ்வரி அருணாசலம் அவர்கள் ஆகியவர்களைப் புகழ்ந்து பாராட்டுதலுடன் தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது. போட்டியில் பங்கு பற்றிய சகலர்க்கும் எம் நன்றி உரியது.

**நன்றி ஸ்ரீலங்கா சஞ்சிகை,**
**ஜனவரி 1950 (பக்.15)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசு பெற்றோரைப் பாராட்டித் தீவகத்தில் நடைபெற்ற விழாவில் (1950)
அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. எல். தம்பிஐயாவும், விழாக் குழுவினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org